MAY 2024 **P/ID 28523/PCM3M**

Time : Three hours Maximum : 80 marks

SECTION A — ($10 \times 2 = 20$ marks)

Answer any TEN questions.

1. Define – Financial Forecasting.

   நிதியில் முன்கணிப்பு - வரையறு.

2. What do you mean by Debentures?

   கடனீட்டு பத்திரங்கள் பற்றி நீ அறிவது யாது?

3. What is under Capitalization?

   குறை மூலதனம் என்றால் என்ன?

4. What do you mean by Capital Structure planning?

   மூலதன கட்டமைப்பு திட்டம் என்பது பற்றி நீ அறிவது யாது?

5. Point the features of cost of concept.

   அடக்க கோட்பாட்டின் சிறப்பியல்புகளை காட்டுக.

6. What is Investment Decision?

   முதலீட்டு தீர்மானங்கள் என்றால் என்ன?

7. Define — Credit Policies.

   கடன் கொள்கைகள் - வரையறு.

8. What is permanent working capital?

   நிரந்தர நடைமுறை மூலதனம் என்றால் என்ன?

9. Define – ABC Analysis.

   ABC ஆய்வுகள் - வரையறு.

10. What do you mean by net present values?

    நிகர தற்போதைய மதிப்புகள் பற்றி நீ அறிவது யாது?

11. Define – Cumulative preference shares.

குவிவு முன்னுரிமைப் பங்குகள் - வரையறு.

12. Write short note on hire purchase financing.

வாடகை கொள்முதல் நிதியியல் பற்றி சிறு குறிப்பு எழுதுக.

SECTION B — ($5 \times 6 = 30$ marks)

Answer any FIVE questions.

13. What are the importance of financial management?

நிதியியல் மேலாண்மையின் முக்கியத்துவம் யாது?

14. State the determinants of capital structure.

மூலதன கட்டமைப்பை தீர்மானிக்கும் காரணிகளை தெரிவி.

15. Ramu Ltd. is expecting an annual EBIT of Rs. 1,00,000. The Company has Rs. 4,00,000 in 10% debentures. The equity capitalization rate is 12.5%. The Company proposes to issues additional equity shares of Rs. 1,00,000 and use the proceeds for redemption of debenture of Rs. 1,00,000. Calculate the value of the firm (V) and the overall cost of Capital (Ko).

ராமு நிறுமம் ஆண்டுக்கு ரூ. 1,00,000 வட்டி மற்றும் வரிக்கு முந்தைய இலாபம் (EBIT) எதிர்பார்க்கிறது. இந்த நிறுமத்தில் 10% கடனீட்டு பத்திரம் ரூ. 4,00,000 மதிப்பில் உள்ளது. பங்கு மூலதனமாக்கல் விகிதம் 12.5% ஆகும். இந்த நிறுமத்தின் கடனீட்டு பத்திரத்தை மீட்பதற்காக கூடுதலாக ரூ. 1,00,000 மதிப்புள்ள சமநிலைப் பங்குகளை வெளியிட திட்டமிட்டுள்ளது. இந்தி நிறுமத்தின் மதிப்பு (V) மற்றும் மொத்த மூலதனத்தை (Ko) கணக்கிடுக.

16. Ravi is a shareholder in Indian polyester Ltd. The earnings of the company have varied considerably. Ravi feels that the long run average dividend would be Rs.3 per share. He expects that the same pattern would continue in future. Ravi expects a minimum rate of earning of 15%. At what price Ravi should buy the share of the company?

ரவி என்பவர் இந்தியன் பாலியஸ்டர் நிறுமத்தின் பங்குதாரர் ஆவார். இந்த நிறுமத்தின் இலாபம் ஈட்டும் தன்மை கணிசமாக மாறுபடுகிறது. நீண்டகால சராசரி ஈவுத்தொகை ஒரு பங்கிற்கு ரூ. 3 ஆக இருக்கும் என்று ரவி கருதுகிறார் எதிர்காலத்திலும் இதே அளவு அமைப்பு தொடரும் என எதிர்பார்க்கிறார். ரவி குறைந்தபட்சம் 15% வருமானத்தை எதிர்பார்க்கிறார். ரவி இந்த நிறுவனத்தின் பங்கை என்ன விலைக்கு வாங்க வேண்டும்?

17. What are the factors determining Working Capital Requirements?

நடைமுறை மூலதனத்தை தீர்மானிக்கும் காரணிகள் யாவை?

18. Explain about evaluation of investment proposal.

முதலீட்டு முன்மொழிவு மதிப்பீடு பற்றி விளக்கவும்.

19. Discuss the various problems in over capitalization.

மிகை மூலதனத்தில் உள்ள பல்வேறு பிரச்சனைகளை விவாதி.

SECTION C — (3 × 10 = 30 marks)

Answer any THREE questions.

20. Explaining the problems in financial forecasting.

நிதியியல் முன்கணிப்பில் உள்ள பிரச்சனைகளை விளக்குக.

21. What are the features of optimum Capital Structure?

உன்னத மூலதன கட்டமைப்பில் உள்ள சிறப்பியல்புகள் யாவை?

22. The following items have been taken from the balance sheet of Sakthi Sugars Ltd as on 31st March 2008.

	Rs.
2,00,000 Shares of Rs.10 each (Paid-up)	20,00,000
Reserves and Surplus	30,00,000
Loan: 12% Non-Convertible Debentures	10,00,000
10% Institutional Loans	40,00,000

Other relevant information :

Year ended 31st March	Dividend per Share (Rs.)	EPS (Rs.)	Average Market Price (Rs.)
2005	2.00	4.00	24.00
2006	2.50	5.00	30.00
2007	3.00	6.00	40.00

Calculate the weighted average cost of Capital. Use book values as weights and earnings/ Price Ratio as the basis for cost of equity. Assume a tax rate of 50%.

பின்வரும் இருப்புகள் சக்தி சுகர்ஸ் நிறுமத்தின் 31.03.2008 க்கான இருப்பு நிலைக் குறிப்பிலிருந்து எடுக்கப்பட்டவையாகும்.

	ரூ.
2,00,000 பங்குகள் ரூ. 10 வீதம் (செலுத்தப்பட்ட)	20,00,000
காப்புகளும் உபரிகளும்	30,00,000
கடன் : 12% மாற்ற முடியாத கடனீட்டு பத்திரம்	10,00,000
10% நிறுவனங்கள் கடன்	40,00,000

மற்ற தொடர்புடைய தகவல்கள் :

ஆண்டு இறுதி மார்ச் 31	பங்காதயம் பங்கு ஒன்றிற்கு (ரூ.)	EPS (ரூ.)	சராசரி சந்தை விலை (ரூ.)
2005	2.00	4.00	24.00
2006	2.50	5.00	30.00
2007	3.00	6.00	40.00

மூலதனத்தின் சராசரி செலவைக் கணக்கிடுங்கள். புத்தக மதிப்புகளை எடைகளாகவும், வருவாய்/விலை விகிதத்தை பங்குச் செலவுக்கான அடிப்படையாகவும் பயன்படுத்தவும். 50% வரி விகிதத்தை வைத்துக் கொள்ளுங்கள்.

23. Discuss the factors determining investment decision.

முதலீட்டு தீர்மானத்தை தீர்மானிக்கும் காரணிகளை விவாதி.

24. Godrej Company sells goods in the home market and earn a gross profit of 20% on sales. Its annual figures are as follows:

Particulars	Rs.
Sales	3,00,000
Materials used	1,08,000
Wages	96,000
Manufacturing Expenses	1,20,000
Administrative Expenses	30,000
Depreciation	12,000
Selling Expenses	18,000
Income Tax payable in two installments of which one falls in the next year	30,000

Additional Information :

(a) Credit given by suppliers -2 months

(b) Credit allowed to customers - 1 month

(c) Lag in payment of wages -½ month

(d) Lag in payment of Administrative Expenses -1 month

(e) Selling expenses are paid quarterly in advance

(f) Raw materials and finished goods are in stock for 1 month

(g) Cash balance estimated to be maintained at Rs. 30,000

You are required to prepare a statement of working capital requirements.

கோத்ரெஜ் நிறுவனம் உள்ளூர் சந்தையில் பொருட்களை விற்று விற்பனையில் 20% மொத்த இலாபத்தை பெறுகிறது. அதன் வருடாந்திர புள்ளி விவரங்கள் பின்வருமாறு :

விபரங்கள்	ரூ.
விற்பனை	3,00,000
மூலப்பொருள்கள் பயன்பாடு	1,08,000
கூலிகள்	96,000
தயாரிப்பு செலவுகள்	1,20,000
நிர்வாகச் செலவுகள்	30,000
தேய்மானம்	12,000
விற்பனை செலவுகள்	18,000
இரண்டு தவணைகளில் வருமான வரி செலுத்த வேண்டும் அதில் ஒன்று அடுத்த ஆண்டில் விழுகிறது	30,000

கூடுதல் தகவல்கள் :

(அ) பொருள் வழங்குபவர்கள் வழங்கப்படும் கடன் – 2 மாதங்கள்

(ஆ) வாடிக்கையாளருக்கு அனுமதிக்கப்படும் கடன் – 1 மாதம்

(இ) ஊதியம் வழங்குவதில் காலதாமதம் – 1/2 மாதம்

(ஈ) நிர்வாக செலவுகளை செலுத்துவதில் காலதாமதம் – 1 மாதம்

(உ) விற்பனை விரிவாக்கம் காலாண்டுக்கு முன்பணம் செலுத்தப்படுகிறது.

(ஊ) மூலப்பொருட்கள் மற்றும் முடிக்கப்பட்ட பொருள்கள் 1 மாதத்திற்கு கையிருப்பில் உள்ளன.

(எ) நிர்வாகிக்க வேண்டிய ரொக்க இருப்பு ரூ. 30,000 என மதிப்பிடப்பட்டுள்ளது.

நடைமுறை மூலதனத் தேவை அறிக்கை தயாரிக்க வேண்டப்படுகிறது.

———————